RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 190 | ஜூலை.13 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அரசு பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை: டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை: ஜூலை.13-

அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருப்பூர் மாவட்டம் வீரபாண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் போதிய வகுப்பறைகள் இல்லாததால் மாணவர்கள் மொட்டை மாடியில் அமர்ந்து படிக்கும் காணொளி காட்சிகள் வெளியாகியிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

அரசுப் பள்ளிகளில் குடிநீர், கழிப்பறை, வகுப்பறைகள் பற்றாக்குறை போன்ற அடிப்படை வசதியின்மை குறித்து பலமுறை சுட்டிக்காட்டியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத பள்ளிக்கல்வித்துறையால் அரசுப் பள்ளிகளின் தரம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்வதாக புகார் எழுந்துள்ளது.

அரசுப்பள்ளி மாணவர்கள் மரத்தடியிலும், மொட்டை மாடியிலும் அமர்ந்து கல்வி பயில்வதை பார்க்கும் போது ஆண்டுதோறும் அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்படும் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதி எங்கே செல்கிறது? என்ற கேள்வியை எழுப்புகிறது.

அடிப்படை வசதிகள் தொடங்கி ஆசிரியர்கள் பற்றாக்குறை வரை அரசுப் பள்ளிகளில் நிலவும் அவல நிலையில் மாணவர்கள் ஒருபுறம் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில், மறுபுறம் அரசுப் பள்ளிகள் பெருமையின் அடையாளம் என பள்ளிக் கல்வித்துறை விளம்பரம் செய்து கொண்டிருப்பது வெட்கக்கேடானது.

எனவே, இனியாவது விளம்பர மோகத்தை ஒதுக்கிவைத்துவிட்டு அரசுப்பள்ளிகளின் உண்மை நிலையை அறிந்து, ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் நிதியை முறையாக பயன்படுத்தி அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## திருவக்கரை வக்கரகாளியம்மன் கோயிலில் எடப்பாடி பழனிசாமி நள்ளிரவில் தரிசனம்!

விழுப்புரம்: ஜூலை.13-

விழுப்புரம் மாவட்டத்தில் 2 நாள் சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, திருவக்கரை வக்கரகாளியம்மன் கோயிலில் நேற்று முன்தினம் நள்ளிரவு சுவாமி தரிசனம் செய்தார்.

‘மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்’ என்ற தலைப்பில் தமிழகம் முழுவதும் பிரச்சார பயணத்தை, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மேற்கொண்டுள்ளார். இதையொட்டி விழுப்புரம் மாவட்டத்துக்கு 2 நாள் சுற்று பயணமாக நேற்று முன்தினம் நண்பகல் வருகை தந்தார்.

விழுப்புரம், விக்கிரவாண்டி, திண்டிவனம் சட்டப்பேரவைத் தொகுதியில் பிரச்சார பயணத்தை மேற்கொண்ட பழனிசாமி, திருச்சிற்றம்பலம் கூட்டு ரோட்டில் உள்ள நட்சத்திர விடுதியில் நேற்று முன்தினம் இரவு தங்கினார். திண்டிவனத்தில் பிரச்சார பயணத்தை முடித்து கொண்டு விடுதிக்கு சென்றவர், சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு, வானூர் அடுத்த திருவக்கரையில் உள்ள பழமையான வக்கரகாளியம்மன் கோயிலுக்கு நள்ளிரவு சுமார் 11.30 மணியளவில் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

பவுர்ணமி என்பதால் அங்கு நடைபெற்ற சிறப்பு பூஜையில் பங்கேற்று, வக்கரகாளியம்மனை மனமுருகி வேண்டினார். அவருக்கு, கோயில் நிர்வாகம் சார்பில் பிரசாதம் வழங்கப்பட்டது. திருவக்கரை வக்கிர காளியம்மன் கோயிலில், யார் ஒருவர் காலடி எடுத்து வைக்கிறாரோ, அவரது ஜாதகத்தில் உள்ள அனைத்து வக்கிரத் தோஷங்களும் விலகும் என்பது ஐதீகம்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, அடுத்தாண்டு நடைபெறக் கூடிய சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கோயில் கோயிலாக சென்று சுவாமி தரிசனம் செய்து வருகிறார். இந்த வரிசையில், திருவக்கரை வக்கரகாளியம்மன் கோயிலும் இடம் பிடித்துள்ளது.

## இளைஞர்கள்தான் இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்துக்கான உத்தரவாதம் : பிரதமர் மோடி

புதுடெல்லி: ஜூலை.13-

நாட்டின் இளைஞர்கள்தான் நாட்டின் மூலதனம். அவர்கள்தான் நாட்டின் பிரகாசமான எதிர்காலத்துக்கான உத்தரவாதம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ரோஜ்கர் மேளா திட்டத்தின் கீழ் அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்ட 51 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்களை பிரதமர் நரேந்திர மோடி இன்று விநியோகித்தார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, “நமது நாடு 3வது பெரிய பொருளாதாரமாக மாறுவதை நோக்கி நகர்கிறது. கடந்த 11 ஆண்டுகளில் நாடு ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது.



இதுபோன்ற வேலைவாய்ப்பு மேளாக்கள் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். அவர்கள் நமது நாட்டின் வளர்ச்சிக்காக பங்களித்து வருகின்றனர். சிலர் நாட்டை பாதுகாக்கும் பணியில் இருக்கிறார்கள். சிலர் அனைவருக்கும் உதவுகிறார்கள். சிலர், நாட்டின் நிதியை வலுப்படுத்தும் பணியை மேற்கொள்கிறார்கள். பலர் நாட்டின் தொழில்துறை வளர்ச்சியை மேம்படுத்துகிறார்கள். துறைகள் வெவ்வேறானவை. ஆனால், நோக்கம் ஒன்றுதான் அது நாட்டுக்கான சேவை.

தனியார் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை திட்டத்தை மத்திய அரசு சமீபத்தில் அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தனியார் துறையில் தங்கள் முதல் வேலையைப் பெறும் இளைஞர்களுக்கு அரசு ரூ. 15,000 வழங்கும். அதாவது, அவர்களின் முதல் வேலையின் முதல் சம்பளத்துக்கு அரசாங்கம் பங்களிக்கும். இந்த திட்டத்துக்காக அரசு பட்ஜெட்டில் ரூ. 1 லட்சம் கோடி ஒதுக்கி உள்ளது. இந்த திட்டம் தோராயமாக 3.5 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும்.

இன்று இந்தியாவின் மிகப் பெரிய வலிமைகளில் ஒன்றாக உற்பத்தித் துறை விளங்குகிறது. உற்பத்தித் துறையில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக மேக் இன் இந்தியா பிரச்சாரத்தை நாங்கள் வலுப்படுத்தி உள்ளோம். ஆபரேஷன் சிந்தூருக்கப் பிறகு பாதுகாப்புத் துறையில் உற்பத்தி பற்றி நிறைய விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. பாதுகாப்புத் துறையில் உற்பத்தி தற்போது ரூ. 1.25 லட்சம் கோடியைத் தாண்டி உள்ளது.

இன்று இந்தியா 2 வரம்பற்ற சக்திகளைக் கொண்டுள்ளது என்பதை உலகம் ஒப்புக்கொள்கிறது. ஒன்று, நமது மக்கள்தொகை. இரண்டாவது நமது ஜனநாயகம். இளைஞர்களின் பலம் இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்துக்கான மிகப் பெரிய சொத்து; மிகப் பெரிய உத்தரவாதம். இந்த சொத்தை செழிப்புக்கான சூத்திரமாக மாற்றுவதில் எங்கள் அரசு தொடர்ந்து பாடுபடுகிறது.

சமீபத்தில் நான் 5 நாடுகளுக்குச் சென்றுவிட்டு திரும்பினேன். ஒவ்வொரு நாட்டிலும் இந்தியாவின் இளைஞர் சக்தியின் எதிரொலியை கேட்க முடிந்தது. அந்த நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் நிச்சயமாக நமது இளைஞர்களுக்கு தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் பயனளிக்கும்.” என தெரிவித்தார்.

## ‘வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் 17 உரைகள்’ மோடிக்கு பாஜக பாராட்டு; காங்கிரஸ் விமர்சனம்

புதுடெல்லி: ஜூலை.13-

வெளிநாடுகளின் நாடாளுமன்றங்களில் காங்கிரஸ் பிரதமர்களுக்கு இணையாக பிரதமர் நரேந்திர மோடி 17 உரைகளை ஆற்றியுள்ளார். இதற்காக தனது எக்ஸ் தளத்தில் பாஜக பெருமிதம் தெரிவித்த நிலையில், காங்கிரஸ் இதனைக் கடுமையாக விமர்சித்துள்ளது.

பிரதமர் மோடி சமீபத்தில் ஐந்து நாடுகளுக்கு விஜயம் செய்து, கானா, டிரினிடாட்-டொபாகோ மற்றும் நமீபியா நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். கடைசியாக நமீபியா நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரையாற்றியபோது, அந்நாட்டு எம்பிக்கள் எழுந்து நின்று கைதட்டி வரவேற்றனர்.

இது, பிரதமர் மோடி வெளிநாட்டு எம்.பிக்கள் இடையே ஆற்றிய 17வது உரை. இதன் சிறப்பு என்னவெனில், இது அவருக்கு முன் இருந்த அனைத்து காங்கிரஸ் பிரதமர்களின் மொத்த உரைகளுக்கும் சமமானது. இதை தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்ட பாஜக தலைமை, பிரதமர் மோடி மீது பெருமிதம் தெரிவித்தது.

இது குறித்து பாஜகவின் எக்ஸ் தளத்தில், ‘பிரதமர் மோடி வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் இதுவரை 17 உரைகளை நிகழ்த்தியுள்ளார். இது பல



தசாப்தங்களாக காங்கிரஸ் பிரதமர்கள் அனைவரும் ஆற்றிய உரைகளுக்கு சமம். காங்கிரஸ் பிரதமர்கள் பல தலைமுறைகளாக ஆற்றியதை அவர் ஒரே தசாப்தத்தில் சாதித்துள்ளார். இது உலகளவில் மிகவும் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக அவரது நற்பெயரை உறுதிப்படுத்துகிறது’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் மோடிக்கு முன்பாக அப்பதவியிலிருந்த காங்கிரஸ் பிரதமர்கள் ஆற்றிய உரைகளின் எண்ணிக்கையும் அப்பதிவில் பட்டியலிடப்பட்டுள்ளது. இதன்படி, ஜவஹர்லால் நேரு (3), இந்திரா காந்தி (4), ராஜீவ் காந்தி (2), நரசிம்ம ராவ் (1) மற்றும் மன்மோகன் சிங் (7) என இவர்கள் மொத்தம் 17 உரைகளை நிகழ்த்தியுள்ளனர்.

அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் இரண்டு முறை வெளிநாடுகளின் நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். ஜனதாவின் பிரதமரான மொரார்ஜி தேசாய் ஒரே ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தில் உரையாற்றி இருந்தார். பிரதமர் மோடி 2014ல் ஆஸ்திரேலியா, பிஜி, பூட்டான் மற்றும் நேபாள நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். 2015 ல் மொரீஷியஸ், மங்கோலியா, ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து மற்றும் இலங்கை நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். 2016ல் அவர் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்திலும், 2023 இல் அதே நாட்டிலும் மீண்டும் உரையாற்றினார்.

உகண்டா நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி, 2018ல் உரையாற்றினார். இதைத் தொடர்ந்து 2019ல் மாலத்தீவு, 2024ல் கயானா, இந்த ஆண்டு, கானா, டிரினிடாட் மற்றும் டொபாகோ மற்றும் நமீபியா நாடாளுமன்றங்களில் பிரதமர் மோடி உரை நிகழ்த்தி உள்ளார்.

காங்கிரஸ் விமர்சனம்: பாஜகவின் பெருமிதத்தை விமர்சிக்கும் வகையில் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், செய்தி தொடர்புப் பொறுப்பாளருமான ஜெய்ராம் ரமேஷ், ’இந்தியா தனது சூப்பர் பிரீமியம், அடிக்கடி பறக்கும் பிரதமரை வரவேற்கிறது. அவர் மூன்று வாரங்களுக்கு நாட்டில் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர், மீண்டும் விமானத்தில் பயணம் செய்வார்.

இப்போது அவர் இங்கு இருப்பதால், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் அவருக்காகக் காத்திருந்த மணிப்பூரைப் பார்வையிட அவருக்கு நேரம் கிடைக்கும். பஹல்காம் பயங்கரவாதிகள் இன்னும் நீதியின் முன் நிறுத்தப்படாததற்கான காரணத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். அவரது சொந்த மாநிலத்தில் உள்கட்டமைப்பு சரிவுகளைப் பற்றி சிந்தியுங்கள்; வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இமாச்சலப் பிரதேசத்திற்கு உதவி வழங்குங்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்

## மகனுக்குப் பதில் மகளுக்கு மகுடம்! மருத்துவர் அய்யா போடும் மனக் கணக்கு

தனது குடும்பத்துப் பெண்கள் அரசியலுக்கு வருவதில் தனக்கு விருப்பமில்லை என்று சொல்லி வந்த மருத்துவர் ராமதாஸ் இப்போது வேறு வழியில்லாமல், மகனைச் சமாளிக்க மகள் ஸ்ரீகாந்தியை அரசியல் மேடைக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

தன் பாட்டுக்கு எதிர்ப்பாட்டுப் பாடும் மகன் அன்புமணியை ஒரேயடியாக ஓரங்கட்டத் துணிந்துவிட்ட பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ், நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட அன்புமணியின் தலைவர் பதவி காலாவதியாகி விட்டதாக தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார். மேலும், நிர்வாகக் குழு மற்றும் மாநில செயற்குழு தீர்மானங்கள் மூலமாக கட்சியில் அனைத்து அதிகாரங்களும் தனக்கு மட்டுமே என்பதை மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளார் ராமதாஸ்.

இந்த நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க, மகனின் குடைச்சல்களை சமாளிக்க தனது அடுத்த அரசியல் வாரிசாக மூத்த மகள் ஸ்ரீகாந்தியை முன்னிலைப்படுத்த ஆரம்பித்திருக்கிறார் ராமதாஸ். அதற்கேற்ப, கட்சியின் அனைத்து அசைவுகளும் இப்போது ஸ்ரீகாந்தியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது.

அண்மையில் ஓமந்தூரில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்ட மேடையில் இரண்டாவது வரிசையில் அமர வைக்கப்பட்டார் ஸ்ரீகாந்தி. அண்மையில் அன்புமணியால் நீக்கப்பட்ட எம்எல்ஏ வான அருள், “அக்கா ஸ்ரீகாந்திக்கு வணக்கங்கள்” என பெரிய கும்பிடாகப் போட்டுவிட்டுத்தான் பேச்சைத் தொடங்கினார். ஸ்ரீகாந்தியை பிரதானப்படுத்தி செய்தி வெளியிடுமாறு மீடியாக்களிடம் பாமக நிர்வாகிகள் மாய்ந்து மாய்ந்து கேட்டுக் கொண்டதும் கவனிக்கத்தக்கது.

இந்நிலையில், பூம்புகார் மகளிர் மாநாடு ஏற்பாடுகளைப் பார்வையிடச் சென்ற ராமதாஸ், “செயற்குழு கூட்டத்துக்கு முன்பும் பல கூட்டங்களில் எனது மகள் ஸ்ரீகாந்தி பங்கேற்றுள்ளார். அவருக்கு பொறுப்பு வழங்கப்படுமா எனக் கேட்கிறீர்கள். தற்சமயம் வழங்கப்படாது” என்று சொன்னதோடு நிற்காமல், “போகப் போகத் தெரியும்” என பாட்டுப்பாடி புதிர்போட்டார்.

மருமகள் சவுமியா அன்புமணியால் கசப்பான அனுபவங்களைச் சந்தித்த ராமதாஸ், மகனுக்கும் மருமகளுக்கும் சேர்த்து செக் வைக்க இப்போது மகள் ஸ்ரீகாந்தியை முன்னிலைப்படுத்துவது பாமக வட்டாரத்திலும் பேசுபொருளாகி இருக்கிறது.

இது குறித்து ராமதாஸுக்கு நெருக்கமானவர்கள் நம்மிடம் பேசுகையில், “மகனை தனது வழிக்குக் கொண்டு வர தனக்குத் தெரிந்த அத்தனை உத்திகளையும் கையாண்டு பார்த்துவிட்டார் மருத்துவர் அய்யா. அது எதுவுமே கைகொடுக்கவில்லை என்பதால், இப்போது மகனுக்குப் பதிலாக மகளுக்கு மகுடம் சூட்டத் தயாராகிவிட்டார்.

அன்புமணி இனியும் பிடிவாதமாக இருந்தால் அவரை கட்சியை விட்டே நீக்கிவிட்டு மகளை பாமக தலைவராக கொண்டு வருவதற்கான முன்னேற்பாடாகவே ஸ்ரீகாந்திக்கு முக்கியத்துவம் தர ஆரம்பித்திருக்கிறார். தனது முடிவுக்கு கட்சிக்குள்ளும் குடும்பத்துக்குள்ளும் என்ன மாதிரியான ரியாக்‌ஷன் வருகிறது என அய்யா இப்போது ஆழம் பார்க்கிறார்.

உடன்பிறந்த சகோதரி என்றாலும் அன்புமணிக்கும் ஸ்ரீகாந்திக்கும் இப்போது சுமுகமான உறவு இல்லை. தனது மகன் முகுந்தனை பாமக இளைஞர் சங்க பதவியில் அமர்த்த அன்புமணி எதிர்ப்புக் காட்டியதால் அவர் மீது ஸ்ரீகாந்தி கடுமையான வருத்தத்தில் இருக்கிறார். அய்யா இப்போது எடுத்திருக்கும் முடிவால் ஸ்ரீகாந்தியும் உற்சாகமாகி இருக்கிறார்.

அதேசமயம், அய்யா இப்படியொரு ரூட் எடுப்பது தெரிந்ததும் அவர் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து கடந்த 10ம் தேதி இரவு தைலாபுரத்துக்கு வந்திருக்கிறார் அன்புமணி. அம்மாவிடம் நலம் விசாரிக்க வந்ததாக சொல்லப்பட்டாலும், மகளை முன்னிலைப்படுத்தி அய்யா எடுக்கும் அரசியல் நகர்வுகளுக்கு அம்மா மூலம் அணை போடவே அவர் வந்ததாகத் தெரிகிறது” என்றனர்.

தந்தையும் தனயனும் மாற்றி மாற்றி எழுதிக் கொண்டிருக்கும் இந்த நவீன சிந்துபாத் கதை எப்போது முடிவுக்கு வரும் என்பதே பாமக தொண்டர்களின் பதைபதைப்பாக இருக்கிறது.

# ஃபிராங்க்ளின் டெம்பிள்டன், ஃபிராங்க்ளின் இந்தியா மல்டி அசெட் அலோகேஷன் ஃபண்டை அறிமுகப்படுத்துகிறது

* புரொப்ரைட்ரி அசெட் கிளாஸ் செலக்ஷன் மாடலால் இயக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட ஆல்இன்ஒன் போர்ட்ஃபோலியோ.
* பங்கு வரிவிதிப்பு நன்மையுடன், எதிர்மறை அபாயத்தை நிர்வகிப்பதையும், போர்ட்ஃபோலியோ நிலையற்ற தன்மையைக் குறைப்பதையும் இந்நிதி நோக்கமாகக் கொண்டுள்ளது

கோயம்புத்தூர், ஜூலை.12-

ஃபிராங்க்ளின் டெம்பிள்டன் (இந்தியா), இன்று ஃபிராங்க்ளின் இந்தியா மல்டி அசெட் அலோகேஷன் ஃபண்ட் (எஃப்ஐ எம்ஏஏஎஃப்) தொடங்கப்பட்டது குறித்த அறிவிப்பை வெளியிட்டது. இது பங்கு, கடன், பண்டங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யும் அதன் திறந்தமுடிவு பல சொத்து ஒதுக்கீட்டு நிதியாகும். இந்த மாறும் வகையில் நிர்வகிக்கப்படும் நிதி, பெரிய, நடுத்தர, சிறிய மூலதனப் பிரிவுகளில் வளர்ச்சி மற்றும் மதிப்பு உத்திகளின் கலவையுடன் பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் நீண்டகால மூலதன மதிப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது கடன், பணச் சந்தை கருவிகள், மற்றும் பண்டங்களுக்கான ஒதுக்கீடுகளால் நிரப்பப்படுகிறது. இப்புதிய நிதி சலுகை 2025 ஜூலை 11 அன்று தொடங்கி, 2025 ஜூலை 25 அன்று முடிவடையும், அப்போது யூனிட்டுகள் ஒரு யூனிட்டுக்கு ரூ.10/க்கு கிடைக்கும். இதன் அறிமுக நிகழ்வில் பேசிய ஃபிராங்க்ளின் டெம்பிள்டன்இந்தியாவின் தலைவர் அவினாஷ் சத்வாலேகர் அவர்கள் இவ்வாறு கூறினார், “இந்த நிதியின் அறிமுகம் எங்கள் வாடிக்கையாளர்களின் முன்னுரிமைகள், இலக்குகள், சவால்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களின் நீண்டகால நிதி நோக்கங்களுடன் இணைந்த தீர்வுகளை வழங்குவதற்கும் எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. எஃப்ஐஎம்ஏஏஎஃப் (FIMAAF) பங்குகள், நிலையான வருமானம், மற்றும் பண்டங்களின் தனித்துவமான ஆபத்து வருவாய் புரொஃபைலைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட ஒரு நெகிழ்வான ஒதுக்கீட்டு உத்தியை ஏற்றுக்கொள்கிறது. தற்போதைய நிலையற்ற சூழலில் பங்கு மதிப்பீடுகள் உயர்த்தப்பட்டு பத்திர வருவாய் நிலைப்படுத்தப்படும் இடத்தில் இந்த சொத்து வகைகளை தங்கம் போன்ற பண்டங்களுடன் இணைக்கும் ஒரு போர்ட்ஃபோலியோ சிறந்த ஆபத்து சரிசெய்யப்பட்ட வருமானத்தை வழங்க முடியும்.”

மேற்கொண்டு அவர் கூறியதாவது, “எங்கள் போர்ட்ஃபோலியோ மேலாளர்களின் தரமான நுண்ணறிவுகளுடன் மேக்ரோ பொருளாதார குறிகாட்டிகளை ஒருங்கிணைக்கும் எங்கள் தனியுரிம உலகளாவிய முன்மாதிரியால் வழிநடத்தப்படும் எஃப்ஐஎம்ஏஏஎஃப் (FIMAAF), எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான முதலீட்டு தீர்வை வழங்க முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.”

நிதி அறிமுகம் மற்றும் அதன் முதலீட்டு உத்தி குறித்து கருத்து தெரிவித்த, ஃபிராங்க்ளின் டெம்பிள்டனின், வளர்ந்து வரும் சந்தைகள் ஈக்விட்டி இந்தியாவின் தலைமை முதலீட்டு அதிகாரி ஜானகிராமன் ஸி, அவர்கள் இவ்வாறு கூறினார், “ஈக்விட்டி முதலீடுகள் போர்ட்ஃபோலியோ வளர்ச்சிக்கு மிக முக்கியமானவை, ஆனால் இயல்பாகவே ஏற்ற இறக்கம், அவ்வப்போது திருத் தங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டவை. இந்தியாவிற்கான எங்கள் நீண்டகாலக் கண்ணோட்டம் நேர்மறையானதாக இருந்தாலும், குறுகிய காலத்தில் சந்தைகளைப் பாதிக்கும் சில காரணிகள் மிதமான வருவாய் வளர்ச்சி, அதிக மதிப்பீடுகள், புவிசார் அரசியல் அபாயங்கள் ஆகியவை ஆகும். அத்தகைய சூழலில், பங்குகளுடன் பயனுள்ள, குறைந்த தொடர்பு கொண்ட கடன் மற்றும் தங்கம் போன்ற பிற சொத்து வகைகளுக்கு வெளிப்பாடு போர்ட்ஃபோலியோவின் ஏற்ற இறக்கத்தையும், சரிவுகளையும் குறைக்க உதவும். இதைக் கருத்தில் கொண்டு, பல சொத்து வகைகளில் பன்முகப்படுத்தப்படும் ஒரு நிதியை நாங்கள் வழங்குகிறோம். பங்கு ஒதுக்கீட்டிற்கு, ஃபிராங்க்ளின் இந்தியா மல்டி அசெட் அலோகேஷன் ஃபண்ட், பங்குத் தேர்வுக்காக ஒரு கீழ் மேல் கியுஜிஎஸ்வி (QGSV) கட்டமைப்பை (தரம், வளர்ச்சி, நிலைத்தன்மை, மதிப்பீடு) பயன்படுத்துகிறது மேலும் துறைகள் மற்றும் சந்தை மூலதனமயமாக்கல் முழுவதும் நன்கு பன்முகப்படுத்தப்பட்ட உத்தியை ஏற்றுக் கொள்கிறது.”

ஃபிராங்க்ளின் டெம்பிள்டனின் இந்திய பிக்சட் இன்கம் தலைமை முதலீட்டு அதிகாரி ராகுல் கோஸ்வாமி அவர்கள் மேலும் கூறியதாவது, “கடந்த 20 ஆண்டுகளில், சிறப்பாகச் செயல்படும் சொத்து வகை, பங்குகள், நிலையான வருமானம், பண்டங்கள் இடையே அவ்வப்போது மாறுபடுகிறது. எனவே, அவ்வப்போது அவற்றுக்கிடையே உகந்த சொத்து ஒதுக்கீட்டைக் கொண்ட ஒரு போர்ட்ஃபோலியோ, குறைந்த எதிர்மறை அபாயத்துடன் வளர்ச்சி திறனை வழங்கும் ஒரு சமநிலையான உத்தியை முதலீட்டாளர்களுக்கு வழங்க முடியும். ஃபிராங்க்ளின் இந்தியா மல்டி அசெட் அலோகேஷன் ஃபண்டின் கடன் பகுதி, அதன் முதலீட்டு நோக்கங்களின்படி போர்ட்ஃபோலியோ முதிர்வுகளை தீவிரமாக நிர்வகிப்பதன் மூலம் பாதுகாப்பு, பணப்புழக்கம், வருமானம் ஆகியவற்றை சமநிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உள்ளக ஆராய்ச்சி திறன்களைப் பயன்படுத்தி, குழு கடன் மதிப்பீடுகளுக்கு அப்பால் உயர்தர நிலையான வருமான வாய்ப்புகளை அடையாளம் காணும், முதன்மையாக ஏஏஏ (AAA) தரமதிப்பிடப்பட்ட கருவிகளில் கவனம் செலுத்தும்.”



## டாக்டர் பி.எஸ்.இராவ் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது

திருவண்ணாமலை, ஜூலை.13-

ஸ்ரீ சைதன்யா பள்ளியின் முன்னாள் நிறுவன தலைவருமான டாக்டர் பி.எஸ்.இராவ் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் மற்றும் உண்ணாமலை அம்மன் கோவில் வளாகத்தில் ஸ்ரீ சைதன்யா பள்ளி நிறுவனர் டாக்டர் ஜான்சி லட்சுமி பாய் அவர்களின் தலைமையில் 20 மற்றும் 21 ஜூலை 2024 குரு பூர்ணிமா தினத்தன்று அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது

இதில் ஏழை எளிய மாணவர்களுக்கு தரமான சிறந்த கல்வியை வழங்கும் பொருட்டு 1986 ஆம் ஆண்டு ஆந்திரா மாநிலம் விஜயவாடாவில் டாக்டர் பி.எஸ்.இராவ் மற்றும் அவரது மனைவி டாக்டர் ஜான்சி லட்சுமிபாய் ஆகியோரால் ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனமானது தொடங்கப்பட்டது. தொடர்ந்து 40 ஆண்டுகளாக கல்வியில் ஆற்றி வரும் மிகச் சிறப்பான சேவையை பயணமாக தற்போது இந்தியாவில் 18 மாநிலங்களில் 900ருக்கும் மேற்பட்ட பள்ளிகள் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனமானது அனைத்து துறைகளிலும் மாணவர்களை முதன்மையான வர்களாகவும், வெற்றியாளர்களாகவும் உருவாக்கி விடும் வகையில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இதுவே டாக்டர் பி.எஸ்.இராவ் அவர்களின் லட்சியம் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாபெரும் அன்னதானம் 2024ஆம் ஆண்டு பத்ரபத பூர்ணிமா, மகாளய அமாவாசை, சரத பூர்ணிமா, கார்த்திகை பூர்ணிமா, கார்த்திகை தீபம், மகா பூர்ணிமா, 2024 ஆம் ஆண்டு சித்ரா பூர்ணிமா, ஜேஷ்டா பூர்ணிமா, இந்த விசேஷ நாட்களில் பக்தர்களுக்கு பொதுமக்களுக்கும் அன்னதானம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் வகையில் 10.07.2025 ஆம் தேதியன்று குரு பூர்ணிமா தினத்தையொட்டி ஏராளமான பக்தர்களுக்கும் பொது மக்களுக்கும் டாக்டர் பி.எஸ்.இராவ் அவர்களின் நினைவாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவருக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தேமுதிக பகுதி செயலாளர் பிறந்த நாளை யொட்டி சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்த மாவட்ட செயலாளர் அனகை முருகேசன்





தாம்பரம், ஜூலை.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக செயலாளர் கேட் எம்.தர்மாவின் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி தேமுதிக மார்கெட் ஞானபால் அவர்களின் அலுவலகத்தில் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் தலைமையில் பகுதி செயலாளர் கேட் எம்.தர்மா பிறந்த நாள் கேக் வெட்டி விமர்சியாக கொண்டாடபட்டது. பகுதி செயலாளர் பிறந்த நாளை யொட்டி நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட செயலாளர் அனகை முருகேசன், மாநில நிர்வாகி ராஜா சந்திரசேகர் மார்க்கெட் ஞானப்பால் தேமுதிக பகுதி செயலாளர் தாம்பரம் மாநகர மேற்கு பகுதி வாஷிம் கான் 50வது வட்ட அவை தலைவர் மற்றும் நிர்வாகிகள் சங்கர் வட்டச் செயலாளர் மோகன் சம்பத் ஆகியோர் சால்வைகள் போற்றி பிறந்த நாள் வாழ்த்திக்கள் தெரிவித்தனர். அதனை தொடர்ந்து மாலை பகுதி செயலாளர் கேட் எம்.தர்மா இல்லத்தில் நடைபெற்ற பிறந்த நாள் விழாவில் மாவட்டம் மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா, மாவட்ட வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் அபிநயா, தெற்கு பகுதி துணைச் செயலாளர் டி ஏழுமலை, மாவட்ட பிரதிநிதி ஏபாலமுருகன், தெற்கு பகுதி இளைஞரணி செயலாளர் விஷ்ணு, கிழக்குப் பகுதி இளைஞரணி செயலாளர் சங்கர், தெற்கு பகுதி மகளிர் அணி செயலாளர்கள் டாக்டர் சுமதி, வி.கலா ஆறுமுகம் தெற்கு பகுதி மகளிர் அணி துணைச் செயலாளர்கள் திலகா, ரம்யா வட்டச் செயலாளர்கள் குமார், கன்னியப்பன், சந்தோஷ் குமார், பகுதி இளைஞரணி துணைச் செயலாளர் சந்தோஷ் குமார் வட்ட கழக நிர்வாகிகள் விக்கி விஜி சந்திரன் அருண் ஆகியோர் சால்வைகள் போற்றி பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். பின்னர் அணைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

## இமாச்சலில் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட 9 பேர் உடல்கள் 150 கி.மீ. தூரத்தில் மீட்பு



சிம்லா, ஜூலை.13-

இமாச்சலில் கடந்த 4 வாரங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் பல ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இந்நிலையில் இமாச்சலின் பங்க்லூயட் கிராமத்தைச் சேர்ந்த 9 பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் அந்த கிராமத்திலிருந்து 150 கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஜூவாலப்பூர் என்ற இடத்தில் 4 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

அவர்கள் அடித்துச் செல்லப்பட்டு 10 நாட்களான நிலையில் நேற்று சடலங்கள் மீட்கப்பட்டன. 2 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரில் தற்போது கெம்லதா (23) என்பவர் மட்டும் உயிருடன் உள்ளார். அவரது தாய் தேவகி, அண்ணன் ஜாபர், 9 வயது சிறுவன் உள்ளிட்ட 4 பேரின் உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டன. கெம்லதாவின் பாட்டி, தந்தை பத்மா சிங், மைத்துனி பார்வதி, 7 வயது சிறுவன் உள்ளிட்டோரின் உடல்கள் இன்னும் கிடைக்கவில்லை. அவர்களின் உடல்களை தேடும் பணி நீடிக்கிறது.





## மானாமதுரை மக்களை ‘சமூக சமத்துவ’ மாநாட்டிற்கு அழைப்பு விடுத்த ஜான் பாண்டியன்

மானாமதுரை, ஜூலை.13-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையை அடுத்த அரிமண்டபம் கிராமத்திற்கு தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் பெ. ஜான்பாண்டியன் நேற்று வருகைபுரிந்து பொதுமக்களை சந்தித்தார். திண்டுக்கல்லில் நடைபெறவுள்ள ‘சமூக சமத்துவ’ மாநாட்டில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு இந்த சந்திப்பின் மூலமாக அழைப்பு விடுத்தார். அதனைத் தொடர்ந்து தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் கொடியினையும் ஜான் பாண்டியன் ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் மா. வீ. முத்து, மானாமதுரை ஒன்றிய துணை செயலாளர் கரு. பகத்சிங்,ச.மோகன், தமிழக மக்கள் முன்னேற்ற கட்சியினர் மற்றும் கிராம பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.



## அமெரிக்கா கூடுதலாக 10% வரி விதித்தால் பின்னலாடை ஏற்றுமதி பாதிக்கும்: ஏற்றுமதியாளர்கள் கவலை

திருப்பூர், ஜூலை.13-

இந்திய பொருள்களுக்கு அமெரிக்கா கூடுதலாக 10% வரி விதித்தால் ஏற்றுமதி பாதிக்கப்படும் என அமெரிக்க வரி விதிப்பு குறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் சுப்பிரமணியன் வேதனை தெரிவித்தார். அமெரிக்கா கூடுதலாக 10% வரி விதித்தால் பின்னலாடை ஏற்றுமதி பாதிக்கும் என்று ஏற்றுமதியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## ரூபாய் 45.20 லட்சம் மதிப்பீட்டில் 1000 ஆண்டு பழமை வாய்ந்த மண்ணிவாக்கம் மண்ணீஸ்வரர் திருக்கோவில் திருப்பணி துவக்க விழா

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு





மண்ணிவாக்கம், ஜூலை.13

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில் இந்து சமய அறநிலைய துறை சார்பில் ரூபாய் 45.20 லட்சம் மதிப்பீட்டில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மண்ணீஸ்வரர் திருக்கோவில் திருப்பணி துவக்கவிழா மாண்புமிகு தமிழக முதல்வர் காணொளி காட்சியின் வாயிலாக துவங்கி வைத்தார். அதனை தொடர்ந்து

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன்,

செங்கக்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ் குமார் ஆகியோர் கலந்துக்கொண்டு குத்துவிளக்கேற்றி , அடிக்கல் நாட்டி திருப்பணிகளை துவங்கி வைத்தனர். இந்நிகழ்வில் ,ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன், காட்டாங்கொளத்தூர் வடக்கு, தெற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.டி.லோகநாதன், ஆப்பூர் சந்தானம், ஊராட்சி மன்ற தலைவர் கெஜலட்சுமி சண்முகம், துணைத் தலைவர் சுமதி லோகநாதன், காட்டாங் குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ். கார்த்திக் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள் துணைத் தலைவர்கள் மற்றும் இந்து அறநிலையத்துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பக்தர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துக்கொண்டனர்.

## புதுச்சேரியில் ரூ.18,000க்கு விற்ற புலாசா மீன்



புதுச்சேரி, ஜூலை.13-

ஏனாம் பகுதியில் ரூ. 18 ஆயிரத்துக்கு விற்ற புலாசா மீன் புதுச்சேரி பிராந்தியமான ஏனாம் ஆந்திரம் அருகே கோதாவரி ஆற்றங்கரை பகுதியை ஒட்டி உள்ளது. தெலங்கானா மற்றும் ஆந்திரத்தில் பெய்த கனமழையால் கோதாவரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஏனாம் அருகேயுள்ள தவளேஸ்வரம் அணையில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் ஏனாம் வழியாக செல்லும் கோதாவரி ஆற்றில் 1.5 லட்சம் கனஅடி நீர் செல்கிறது. இந்நிலையில் மீனவர் ஒருவரின் வலையில் புலாசா மீன் கிடைத்தது. ‘மீன்களின் ராஜா’ என்று அழைக்கப்படும் இந்த மீன் ஆந்திரத்தில் விரும்பி உண்ணப்படுகிறது.

அதிக சுவையும், புரதசத்தும் நிறைந்த இந்த மீனை ஏலம் எடுப்பதில் போட்டி ஏற்பட்டது. பொன்னமண்டரத்தினம் என்பவர்ரூ. 15 ஆயிரத்துக்கு ஏலம் எடுத்து, ரூ. 18 ஆயிரத்துக்கு விற்றதாக தெரிவித்தார். தற்போது வெள்ளத்தில் அதிகளவில் புலாசா மீன்கள் கிடைக்கும் என்று மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.



# அந்தமான் அருகே பாய்மர படகில் தத்தளித்த 2 அமெரிக்கர்களை மீட்டது இந்திய கடலோர காவல் படை

புதுடெல்லி, ஜூலை.13-

அந்தமான் அருகே கடல் கொந்தளிப்பு காரணமாக பாய்மரப் படகில் தத்தளித்த 2 அமெரிக்கர்களை, இந்திய கடலோர காவல் படையினர் நேற்று மீட்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த இருவர் 'சீ ஏஞ்சல்' என்ற நவீன பாய்மரப் படகில் பல நாடுகளுக்கு செல்லும் சாகச பயணத்தில் ஈடுபட்டனர்.

அந்தமான் நிக்கோபார் தீவுகள் அருகே நேற்று கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டது. பலத்த காற்று வீசியதில் படகின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த பிளாஸ்டிக் பாய்கள் எல்லாம் கிழிந்தன.

இதனால் அந்த படகு பயணத்தை தொடர முடியாமல் நடுக்கடலில் தத்தளித்தது. இத்தகவல் சென்னையில் உள்ள அமெரிக்க துணை தூதரக அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இந்திய கடலோர காவல் படையை தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து இந்திய கடலோர காவல் படையின் ராஜ்வீர் கப்பல் மீட்பு பணிக்கு சென்றது. அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு தெற்கே 53 மைல் தொலைவில் படகில் தத்தளித்துக் கொண்டிருந்த 2 அமெரிக்கர்களையும் இந்திய கடலோர காவல்படையினர் மீட்டனர்.

# சென்னை : ஜூலை 15, 17 தேதிகளில் 27 மின்சார ரயில் சேவையில் மாற்றம்

சென்னை, ஜூலை.13-

சென்னை கூடூர் மார்க்கத்தில் கும்மிடிப் பூண்டி பொன்னேரி இடையே பொறியியல் பணி நடக்கவுள்ளதால், 27 மின்சார ரயில்களின் சேவையில் 15, 17 ஆகிய தேதிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளது. அதன் விவரம்: சென்ட்ரல் கும்மிடிப்பூண்டிக்கு ஜூலை 15, 17 ஆகிய தேதிகளில் காலை 8.05,9.00, 9.30, 10.30, 11.35 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் மின்சார ரயில்கள் ரத்து செய்யப்படும். சென்ட்ரல் சூலூர்பேட்டைக்கு அதே நாட்களில் அதிகாலை 5.40, காலை 8.35, 10.15, நண்பகல் 12.10 ஆகிய நேரங்களில் இயக்கப் படும் மின்சார ரயில்கள், சூலூர்பேட்டை சென்ட்ரலுக்கு காலை 10.00, பகல் 11.45, 12.35, மதியம் 1.15 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் ரயில்கள் ரத்து செய்யப்படும். கடற்கரை கும்மிடிப்பூண்டிக்கு அதே நாட்களில் காலை 9.40, நண்பகல் 12.40 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் ரயில்கள் ரத்து செய்யப்பட உள்ளன.



சூலூர்பேட்டை நெல்லூருக்கு காலை 7.50 மணிக்கு இயக்கப்படும் ரயில், நெல்லூர் சூலூர்பேட்டைக்கு காலை 10.20 மணிக்கு இயக்கப்படும் ரயில் ஆகியவை ரத்து செய்யப்படவுள்ளன. கும்மிடிப்பூண்டி கடற்கரைக்கு அதே நாட்களில் காலை 10.55 மணிக்கு இயக்கப்படும் மின்சார ரயில் ரத்து செய்யப்படவுள்ளது. கும்மிடிப்பூண்டி சென்ட்ரலுக்கு அதேநாளில் காலை 9.10, 9.55, பகல் 11.25, நண்பகல் 12.00, மதியம் 1.00, பிற்பகல் 2.30 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் ரயில்கள் ரத்து செய்யப்பட உள்ளன.

ஆவடி சென்ட்ரலுக்கு அதே நாட்களில் அதிகாலை 4.25 மணிக்கு இயக்கப்படும் ரயில் ரத்து செய்யப்பட உள்ளது. செங்கல்பட்டு கும்மிடிப்பூண்டிக்கு 15, 17 ஆகிய தேதிகளில் காலை 9.55 மணிக்கு புறப்படும் மின்சார ரயில், கடற்கரை கும்மிடிப்பூண்டி இடையே பகுதி ரத்து செய்யப்படவுள்ளது.

கும்மிடிப்பூண்டி தாம்பரத்துக்கு அதே நாட்களில் பிற்பகல் 3 மணிக்கு புறப்பட வேண்டிய மின் ரயில், கும்மிடிப் பூண்டி கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளது. ரத்து செய்யப்படும் மின்சார ரயில்களுக்கு பதிலாக, அதே நாட்களில், சென்னை சென்ட்ரலில் இருந்து பொன்னேரி, எண்ணூர் இடையே பாசஞ்சர் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். இதுதவிர, சென்னை கடற்கரை மீஞ்சூர் இடையே ஒரு பாசஞ்சர் சிறப்பு ரயிலும் இயக்கப்படும்.

# தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3ன் சீர்கேடுகளை கண்டித்து அஸ்தினாபுரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்

அஸ்தினாபுரம், ஜூலை.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3க்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் நிர்வாக சீர்கேடுகளை கண்டித்து அஸ்தினாபுரம் பகுதி கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் அஸ்தினாபுரம் ஜமீன் ராயப்பேட்டையில் கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக் குமார் தலைமையில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன், அனைத்துலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.




அஸ்தினாபுரம் பகுதி கழக செயலாளர் முன்னாள் கவுன்சிலர் ஆர்.அருணாசலம், தாம்பரம் மாநகராட்சி 22வது வார்டு மாமன்ற உறுப்பினர் கிச்சா என்கிற கிருஷ்ணமூர்த்தி, விஜயநாராயணன் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மகளிர் அணி இணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கனிதா சம்பத், கழக வர்த்தக அணி இணைச்செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். ராமச்சந்திரன், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ். மலர்மன்னன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் மற்றும் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்

கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் பேசியதாவது:

தாம்பரம் பகுதியில் நடைபெறும் பல்வேறு நிர்வாக சீர்கேடுகள் காரணமாக இந்த விடியா திமுக அரசை கண்டித்து பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை கூட செய்யத் தவறிய தாம்பரம் மாநகராட்சியை கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. பொதுமக்களின் அன்றாட பிரச்சனைகளை எடுத்து சொல்ல வேண்டும் என்ற நோக்கில் ஜனநாயக முறையில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த விடியா திமுக அரசு பொறுப்பேற்று நான்கரை ஆண்டுகளில் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. 6 மாதங்களில் தேர்தலை சந்திக்க உள்ள சூழ்நிலையில் இந்தியாவிலேயே அமைதி இல்லாத மாநிலமாக கஞ்சா, ஹேராயின் உள்ளிட்ட பல்வேறு போதைப் பொருட்கள் நடமாடுகின்ற கலாச்சாரம் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது இதில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ஏ.எம். பொன்னுசாமி, மாவட்ட துணைச் செயலாளர் முன்னாள் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான பா.தன்சிங் மாவட்ட கழக பொருளாளர் பி.கே. பரசுராமன், மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச்செயலாளர் சபரீஷ் மணிகண்டன், மாவட்ட அணி செயலாளர்கள் பா.ராஜப்பா, ஜி.எஸ் புருஷோத்தமன், ஜி.எம். சாந்தகுமார், பா.காசிராஜ பாண்டியன், பகுதி, நகர கழகச் செயலாளர்கள்

ஆர்.எஸ்.சுபாஷ், முன்னாள் நகர மன்ற துணைத் தலைவர் பா. அப்பு என்கிற வெங்கடேசன், மாமன்ற உறுப்பினர் வி.ஜெகநாதன், முன்னாள் அரசு வழக்கறிஞர் குரோம்பேட் எம்.கே.சதீஷ், எம்.கூத்தன், எல்லார் செழியன், முன்னாள் ஏ.கோபிநாதன், இ. சம்பத்குமார், ஜெ.சீனுபாபு, மாமன்ற உறுப்பினர் சி. சாய்கணேஷ், வாட்டர் ராஜ், அஸ்தினாபுரம் பகுதி வார்டு செயலாளர்கள் கராத்தே ஸ்ரீதர், ஆர்.வெங்கடேசன், இ.பத்மநாபன், என். ராகவன். என்.குணா, கே.கோபால், எம். தேவ ராஜ், எம்.ஐ.டி.ஜி குமார், ஐ.லோகநாதன், வி.ஞானவேல், எம்.கே வில்லாளன், மா.அன்பு, டி.ராஜேந்திரன். ஆர்.தியாகராஜன், எம் கே சண்முகம், எல்.கோபிநாத், ஜேசுராஜ், முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர், லலிதா சுரேந்திரன், கார்த்திகேயன், சர்குணம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குரூப் 4 தேர்வு முடிவுகள் 3 மாதத்தில் வெளியிடப்படும்: டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பிரபாகர் பேட்டி

சென்னை, ஜூலை.13-

குரூப் 4 தேர்வு முடிவுகள் 3 மாதத்தில் வெளியிடப்படும் என டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பிரபாகர் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு முழுவதும் 4,922 மையங்களில், டிஎன்பிஎஸ்சி குரூப்4 தேர்வு நடைபெற்று வருகிறது. 3,935 பணியிடங்களுக்கு நடைபெறும் இந்த தேர்வை 13 லட்சத்து 89 ஆயிரம் பேர் எழுதுகின்றனர். இந்நிலையில் சென்னையில் தேர்வு மையத்தில் டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பிரபாகர் ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர்; அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்4 தேர்வு தமிழ்நாடு முழுவதும் தொடங்கி நடைபெற்று வருகிறது. சென்னையில் 311 மையங்கள் உள்பட தமிழகம் முழுவதும் 4,922 மையங்களில் குரூப் 4 போட்டி தேர்வு நடைபெறுகிறது.

தேர்வுத்தாள் தயார் செய்து ரகசியமாக கொண்டு செல்ல வேண்டிய நிலை, மதுரையில் மட்டும் ஒருசில பிரச்சினைகள் இருந்தது, மற்ற இடங்களில் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டது. மாவட்ட அலுவலர், வட்டாட்சியர் ஆகியோர் பரிசோதித்த பின் அனுப்பப்படுகிறது. கடந்தாண்டு 10,000 பேரும், நடப்பாண்டில் தற்போது வரை 11,000க்கும் மேற்பட்டோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 7 தேர்வுகளை அறிவித்து அதில் 5 தேர்வுகளை முடித்துள்ளோம். குரூப் 4 தேர்வு முடிவுகள் 3 மாதத்தில் வெளியிடப்படும். வரும் நாட்களில் 10,000 காலி பணியிடங்களுக்கு டிஎன்பிஎஸ்சி தேர்வு நடைபெறும் என்று கூறினார்.

# மராத்திய ராணுவ தளங்கள் யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் சேர்ப்பு: அமித் ஷா புகழாரம்

மும்பை, ஜூலை.13-

மராத்திய ஆட்சியாளர்களால் உருவாக்க ப்பட்ட கோட்டைகள் மற்றும் ராணுவ தளங்கள், தமிழகத்தின் செஞ்சி கோட்டை ஆகியன ஐ.நாவின் யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இதன்மூலம், இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்களின் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்துள்ளது.

அமித்ஷா புகழாரம்: இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சத்ரபதி சிவாஜி மகாராஜின் வாழ்க்கையுடன் தொடர்புடைய 12 கோட்டைகளை யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்த்துள்ளது. இது அனைத்து நாட்டு மக்களுக்கும் மிகுந்த பெருமையைத் தரும் தருணம்.

சில நாட்களுக்கு முன்பு, நான் ராய்காட் கோட்டைக்குச் சென்றேன், சத்ரபதி சிவாஜி மகாராஜின் வாழ்க்கையுடன் தொடர்புடைய அந்த சின்னங்களில் ஆன்மிக



அனுபவத்தைப் பெற்றேன். இந்தக் கோட்டைகள் இந்து சுயாட்சியைப் பாதுகாப்பதற்கான முக்கிய தூண்களாக இருந்து வருகின்றன. இங்கிருந்து, கோடிக்கணக்கான நாட்டு மக்கள் தங்கள் தாய்மொழி மற்றும் கலாச்சாரத்தின் மீது தொடர்ந்து உத்வேகம் பெற்று வருகின்றனர்'' என்று தெரிவித்துள்ளார்

44 ஆக உயர்வு: மராத்தா ராணுவ தளங்கள் யுனெஸ்கோ பட்டியலில் இடம்பெற்றதன் மூலமாக, இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட யுனெஸ்கோ பாரம்பரிய சின்னங்களின் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து யுனெஸ்கோ அமைப்பு வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் இந்தியாவின் மராத்திய ஆட்சியாளர்களின் ராணுவ தளங்கள் இடம்பெற்றுள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது. பாரிஸில் நடைபெற்று வரும் உலக பாரம்பரியக் குழுவின் (கீபிசி) 47வது அமர்வில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து யுனெஸ்கோ பாரம்பரிய சின்னத்துக்கான 2024 25 ம் ஆண்டுக்கான பரிந்துரையில் 'மராத்திய ராணுவ தளங்கள்' இடம்பெற்றது. மராத்திய ராணுவ தளங்களில், மகாராஷ்டிராவில் உள்ள சல்ஹெர் கோட்டை, சிவனேரி கோட்டை, லோஹ்காட், கண்டேரி கோட்டை, ராய்காட், ராஜ்காட், பிரதாப்காட், சுவர்ணதுர்க், பன்ஹாலா கோட்டை, விஜய் துர்க் மற்றும் சிந்துதுர்க் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள செஞ்சி கோட்டை ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்த 'மாராத்திய ராணுவ கோட்டைகள் மற்றும் தளங்கள் ' 17 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைபட்ட காலத்தில் உருவாக்கப்பட்டன.

# குரூப் 4 தேர்வில் 11.48 லட்சம் பேர் பங்கேற்பு: வினாத்தாள் கடினமாக இருந்ததால் தேர்வர்கள் கவலை

சென்னை, ஜூலை.13-

தமிழகம் முழுவதும் நடைபெற்ற குரூப் 4 தேர்வில் 11.48 லட்சம் பேர் கலந்து கொண்டனர். மேலும், வினாத்தாள் கடினமாக இருந்ததாக தேர்வர்கள் தகவல் தெரிவித்தனர்.

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) நடத்தும் போட்டித் தேரவுகள் மூலம் நிரப்பப்படுகின்றன. அதன்படி கிராம நிர்வாக அலுவலர், வனக் காப்பாளர் உட்பட பல்வேறு பதவிகளில் காலியாக உள்ள 3,935 பணியிடங்களை நிரப்புவதற்கான குரூப் 4 தேர்வு மாநிலம் முழுவதும் 3,034 மையங்களில் இன்று நடைபெற்றது.

இந்த தேர்வெழுத மொத்தம் 13 லட்சத்து 89,738 பேர் பதிவு செய்திருந்தனர். அதில் 11 லட்சத்து 48,019 (82.61%) பேர் மட்டுமே தேர்வு எழுதினர். மேலும், 2 லட்சத்து 41,719 நபர்கள் தேர்வு எழுத வரவில்லை. சென்னையில் 311 மையங்களில் நடத்தப்பட்ட குரூப் 4 தேர்வை சுமார் 89 ஆயிரம் பேர் வரை எழுதினர்.



அதேநேரம் குரூப் 4 வினாத்தாள் கடினமாக இருந்ததால் தேர்வு முடிந்தபின் பெரும்பாலான தேர்வர்கள் கவலையுடன் காணப்பட்டனர். இது தொடர்பாக தேர்வர்கள் சிலரிடம் கேட்டபோது, "வினாத்தாளில் கணிதம் தவிர்த்து மற்ற பொது அறிவு, தமிழ் போன்ற பகுதிகள் கடினமாகவே இருந்தன. குறிப்பாக வழக்கமாக எளிதாக இருக்கும் தமிழ் பகுதியில் இந்த முறை 60 முதல் 70 சதவீத வினாக்கள் பாடப்புத்தகங்களுக்கும் வெளியே இருந்து கேட்கப்பட்டன.

அவையும் பெரும்பாலும் இலக்கணம் சார்ந்த கேள்விகளாகவும், சற்று விரிவானதாகவும்கேட்கப்பட்டதால் அதை படித்து விடை எழுத அதிக நேரம் தேவைப்பட்டது. ஆனால், பொது ஆங்கிலத்தில் வினாத்தாள் எளிதாக இருக்கிறது. இந்த பாரபட்சத்தை தவிர்க்க வேண்டும்." என்றனர்.

இதற்கிடையே சென்னை எழும்பூரில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள தேர்வு மையத்தை டிஎன்பிஎஸ்சி தலைவர் பிரபாகர் ஆய்வு செய்தார். அதன்பின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: குரூப் 4 தேர்வு முடிவுகள் அடுத்த 3 மாதங்களில் வெளியிடப்படும். அதேபோல், குரூப் 1 தேர்வை பொறுத்தவரை 2 மாதங்களில் முடிவை வெளியிடுவோம்.

ஏனெனில், இதில் தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை குறைவாகும். இந்த ஆண்டு மொத்தம் 7 தேர்வுகள் அறிவிக்கப்பட்டு, அதில் 5 நடைபெற்றுள்ளன. விரைவில் குரூப் 2, 2ஏ தேர்வுக்கான அறிவிப்பு வெளியிடப்பட உள்ளது. அதேபோல், மதுரையில் வினாத்தாள் வெளியானதாக வந்த தகவல் தவறானதாகும். அனைத்து வினாத்தாள், விடைத்தாள்களும் காவல் துறையின் பாதுகாப்பு, கேமரா கண்காணிப்புடன் தேர்வு மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

இதுதவிர டிஎன்பிஎஸ்சி நடத்தும் தேர்வுகளில் சர்ச்சைக்குரிய வினாக்கள் கேட்கப்படுவதில்லை. எனினும், இத்தகைய புகார்கள் கிடைக்கப் பெற்றால் அரசியல் சார்ந்த சர்ச்சைக்குரிய கேள்விகளை கேட்கக்கூடாது என வினாத்தாள் தயார் செய்யக்கூடிய அதிகாரிகளிடம் அறிவுறுத்தியுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த குருப் 4 தேர்வை பொருத்தவரை நேர்முகத் தேர்வு கிடையாது. எனவே, எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்றாலே அரசுப் பணி வாய்ப்பு உறுதி. தற்போது 3,935 ஆக அறிவிக்கப்பட்டுள்ள காலிப் பணி இடங்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் என துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பருவமழை குறைவால் சுற்றுவட்டார கிராமங்களில் மஞ்சி உற்பத்தி பணி தீவிரம்: டிராக்டர் மூலம் உலர வைக்க ஏற்பாடு

பொள்ளாச்சி, ஜூலை.13-

பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதிகளில் பருவ மழை குறைவால், மஞ்சி உற்பத்தி மீண்டும் அதிகரித்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். பொள்ளாச்சியில் சுற்றுவட்டார பகுதிகளில் தென்னை சாகுடி அதிகமாக உள்ளது. தென்னை விவசாயம் அதிகமாக இருப்பதால், சுற்றுட்டார கிராம பகுதிகளில் தென்னையை மையமாக கொண்டு 350 க்கும் மேற்பட்ட மஞ்சி தொழிற்சாலைகள் செயல்படுகிறது.

இங்கு உற்பத்தியாகும் மஞ்சி பொருட்கள் பல்வேறு வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப் படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கோடை காலங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும்போது மஞ்சி உற்பத்தி அதிகரி க்கிறது. இருப்பினும், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் நார் உலர வைக்க முடியாமல் உற்பத்தி பாதிக்கப்படும்.

இந்நிலையில், பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளில், கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தென்மேற்கு பருவமழை அவ்வப்போது தொடர்ந்து பெய்தது. இதன் காரணமாக பெரும்பாலான தொழிற்சாலைகளிலும் மஞ்சி உலர வைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. பல தொழிற்சாலைகளில் கலன்களில் உலர வைக்கப்பட்ட மஞ்சி மழை நீரில் நனைந்துள்ளது.

சுமார் ஒரு மாதத்திற்கு பிறகு கடந்த சிலநாட்களாக சிலநேரம் சாரலுடன் மழை பெய்து நின்று போனது. மழை குறைந்து வெண்ணிர வெயிலின் தாக்கத்தால், கலன்களில் மீண்டும் மஞ்சி உலர வைத்து உற்பத்தியை அதிகரிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அதிலும் சுற்றுவட்டாரத்தில் உள்ள பல கிராமங்களில் டிராக்டர் மூலம் மஞ்சி உலர வைக்கும் பணி தீவிரமாக நடக்கிறது. சில வாரத்துக்கு பிறகு மஞ்சி உலர வைக்கும் பணி மீண்டும் துவங்கியுள்ளதால், அடுத்து மழை வலுப்பதற்குள் மஞ்சி உற்பத்தியை அதிகரிக்க செய்வதற்கான நடவடிக்கையில் உற்பத்தியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.



# வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் லாரி மோதி பெண் பரிதாபமாக உயிரிழப்பு

வேலூர், ஜூலை.13-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் மூதாட்டி மீது பூண்டு ஏற்றி வந்த லாரி மோதியதில் அந்த பெண்மணி லாரி சக்கரத்தின் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்து சம்பவம் குறித்து இப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. காவல்துறை விசாரணையின் போது அந்தப் பெண்மணியின் பெயர் ஷகினா (வயது 55) என்பது தெரிய வந்தது இது குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# கல்லல் அரசு பள்ளியில் நலத்திட்ட உதவி வழங்கும் விழா




சிவகங்கை, ஜூலை.13-

இந்திய ரிசர்வ் வங்கியின் ஒரு அமைப்பாக செயல்பட்டு வரும் கிரெடிட் அக்சஸ் மற்றும் கிராமீன் லிமிடெட் இந்தியா பவுண்டேசன் நிறுவனம் ஏழை எளிய பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல நலத்திட்டங்களை செய்து வருகிறது. அந்த நிறுவனம் சார்பில் கல்லல் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள சேர், டேபிள், பெஞ்ச், பீரோ, ஃபேன் ஆகியவை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிறுவனத்தின் கோட்ட மேலாளர் நவநீதகிருஷ்ணன், பிராந்திய மேலாளர் மதியழகன், கிளை மேலாளர் அருண்குமார், வட்ட மேலாளர் பிரியங்கா ஆகியோர் கலந்துகொண்டு பொருட்களை வழங்கினர். இப்பள்ளியின் தலைமை ஆசிரியை சாந்திராணி விழாவிற்கு தலைமை தாங்கி கிரெடிட் அக்சஸ் நிறுவனத்தினரை பாராட்டி பேசினார் இவர்கள் வழங்கிய மரக்கன்றினைப் பெற்று மாணவிகள் பள்ளி வளாகத்தில் நட்டனர். நிகழ்ச்சியில் முன்னதாக ஆசிரியை தமிழரசி வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியின் நிறைவாக ஆசிரியை சொர்ணலதா நன்றியுரை கூறினார்.

தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின் பேரில் பள்ளிகளில் செயல்பட்டு வரும் முகில் முற்றம் என்ற அமைப்பின் தொடக்க விழாவும் இதே தினத்தில் இப்பள்ளியில் நடைபெற்றது. மாணவிகள் ஐந்து வண்ண குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் மூன்று பொறுப்பு ஆசிரியைகள் நியமிக்கப்பட்டனர். முகில் முற்ற பொறுப்பாசிரியராக ஆசிரியை ஆணி ரெஜினா நியமிக்கப்பட்டார்.



# மன்னர் துரைசிங்கம் கல்லூரியில் வழிகாட்டல் பயிற்சி விழா



சிவகங்கை, ஜூலை.14-

சிவகங்கையில் உள்ள மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரியில் இளநிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சி விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு அக்கல்லூரியின் முதல்வர் முனைவர் அந்தோணி டேவிட் நாதன் தலைமை தாங்கினார். வணிகவியல் துறைத் தலைவர் முனைவர் கணேசன் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட ஆதிதிராவிட நலத்துறை அலுவலர் ஆனந்தி, விடுதிக் காப்பாளர் கவி சுடர்மணி தமிழ்க்கனல் என்கிற கண்ணன், கல்லூரி நூலகர் வாஞ்சிநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் செல்லதுரை நன்றியுரையாற்றினார். விழாவிற்கான ஏற்பாடுகளை விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் ராமலிங்கம் அவர்களும் , தமிழ் துறை பேராசிரியர் ராமமூர்த்தி அவர்களும் செய்திருந்தனர். விருந்தினர்களின் கேள்விக்கு பதில் அளித்த மாணவ மாணவிகளுக்கு புத்தகப் பரிசுகள் வழங்கப்பட்டது. அனைத்து துறையைச் சார்ந்த பேராசிரியர்களும், கல்லூரி அலுவலர்களும் கலந்து கொண்டனர். திரளான முதலாம் ஆண்டு மாணவ மாணவிகள் இப்பயிற்சியில் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்ட கல்வித்துறையில் அராஜகமான நிர்வாக மாறுதலைக் கண்டித்து இந்தியப் பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




தென்காசி, ஜூலை. 13-

தென்காசி மாவட்டம் செங்கோட்டை SRM பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேர்மையாக பணிபுரியும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் இருவருக்கு வழங்கப்பட்ட நிர்வாக மாறுதலை கண்டித்தும். ரத்து செய்ய வலியுறுத்தியும்.

மாணவிகளின் சேர்க்கைக்கும், மாண விகளின் மாற்றுச்சான்றிதழ் வழங்குவதற்கும் பணம் வசூல் செய்து முறை கேட்டில் ஈடுபட்டதுடன், செங்கோட்டை SRM பெண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளி ஆசிரியர் சங்க சேமிப்பு பணத்தை கையாடல் செய்தும், தான் பணிபுரிந்த காலத்தில் பள்ளி ஆசிரியர்களின் பணிப் பதிவேடுகளில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளுக்கு ஆண்டு கணக்கில் மேலொப்பமிடாத முன் னாள் தலைமையாசிரியர் தமிழ்வாணி மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும்.

ஊழல்முறை கேட்டிற்கு ஆதரவாகவும், மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டு உழைக்கும் செங்கோட்டை SRM பெண்கள் மேனிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர்களுக்கு அராஜகமாக நிர்வாக மாறுதல் வழங்குவதற்கும் காரணமான முதன்மைக்கல்வி அலுவலர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியப்பள்ளி ஆசிரியர் கூட் டமைப்பின் (STFI) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில துணைத்தலைவர் தோழர் கலைச்செல்வி, தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் ஐயப்பன், தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் தங்கராஜ், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் சுதர்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்ட செயலாளர் முத்துக்குமார் அவர்கள் வரவேற்பு பேசினார்.

தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில பொதுக்குழு உறுப்பினர் தோழர் சதீஷ்குமார் அவர்கள் கோரிக்கை விளக்க உரையாற்றினார்.

தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில செயலாளர் தோழர் ராஜ்குமார், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில சட்டச்செயலாளர் தோழர் பிச்சைக்கனி, தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழகத்தின் மாநில துணைத் தலைவர் தோழர் முருகையா, தமிழ்நாடு முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் முன்னாள் மாநில பொருளாளர் மற்றும் அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் பொறுப்பாளர் தோழர் ஜாக்டி மாரியப்பன், தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில அமைப்பு செயலாளர் தோழர் சண்முகசுந்தரம், SRM பெண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான தோழர் ஆயிஷா, இந்திய மாணவர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் மதன் ஆகியோர் ஆர்ப்பாட்டக் கண்டன உரையாற்றினர்.

தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில துணைத்தலைவர் தோழர் முஜ்பூர்ரகுமான் அவர்கள் ஆர்ப்பாட்ட எழுச்சி உரையாற்றினார்.


தமிழ்நாடு உயர்நிலை மேனிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்டப் பொருளாளர் தோழர் பிரேம்குமார் நன்றியுரையாற்றினார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் ராஜ்குமார், சித்திர சபாபதி, சண்முகசுந்தரம், பாக்கியராஜ், நெடுஞ்செழியன், இசக்கியப்பன், முனீஸ்வரன், ராமசாமி, கார்த்திகேயன், முத்துசாமி, முப்புடாதி செல்வராஜ், ரமேஷ் , மாடசாமி மற்றும் 100 பெண்ணாசிரியர்கள் உட்பட 210 பேர் கலந்து கொண்டனர்.




■ சிவகங்கை மாவட்டம் தெற்கு மானாமதுரை ஒன்றியம் மிளகனூர் கிராமத்தில் நேற்று முன்தினம் தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் தலைவர் தமிழினவேந்தர் பெ.ஜான்பாண்டியன் கழக கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார் வரும் ஆகஸ்ட் மாதம் 24 தேதி திண்டுக்கல்லில் சமத்துவ சமூகநீதி மாநாடு கட்சியின் 25 ஆண்டு வெள்ளி விழாவுக்கு அழைப்பு விடுத்தார். நிகழ்வில் மாவட்ட செயலாளர் இடைக்காட்டூர் சுரேஷ் மாவட்ட தலைவர் ரிச்சர்ட் பாண்டியன் மிளகனூர் இளைஞரணி ஒன்றிய செயலாளர் வே.தர்மராஜ் விவசாயி ஒன்றியஅணி செயலாளர் க.தர்மா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# மானாமதுரையில் இரண்டு மணி நேரம் சிக்கித் தவித்த ரயில் பயணிகள்




மானாமதுரை, ஜூலை. 13-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இருந்து விருதுநகர் செல்லும் பயணிகள் ரயில் கடந்த வெள்ளிக்கிழமை 7:00 மணிக்கு மானாமதுரை சந்திப்பு நிலையம் நோக்கி கொன்னக்குளம் அருகே வந்து கொண்டிருந்த போது வைகை மேம்பாலத்தை தாண்டியுள்ள அண்ணாதுரை சிலை அருகே உள்ள ரயில்வே கேட்டை கீப்பர் அடைக்க முயன்றார். அப்போது அந்த வழியாக வந்த கனரக லாரி கேட்டை இறக்கும் போது மோதியதால் கேட் சேதமுற்று அதில் உள்ள மின்சார ஒயர்கள் அறுந்து தொங்கின.இதையடுத்து காரைக்குடியில் இருந்து வந்த பயணிகள் ரயில் கல்குறிச்சி ரயில்வே கேட் அருகே நிறுத்தப்பட்டது. தகவல் அறிந்து வந்த மானாமதுரை போக்குவரத்து காவல்துறை ஆய்வாளர் வெங்கடேசன் மற்றும் காவலர்கள் போக்குவரத்தை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டனர் ரயில்வே கேட் பழுது நீக்கும் வரை வாகனங்களை மாற்றுப்பாதையில் செல்ல வழி வகுத்தனர். மானாமதுரை ரயில்வே ஸ்டேஷனில் இருந்து ஊழியர்கள் பழுது பார்க்கும் ரயில் பெட்டியில் வந்து கேட்டை பழுது நீக்கினர். இதனால் 2 மணி நேரத்திற்கும் மேலாக கல்குறிச்சி ரயில்வே கேட் அருகே ரயில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதேபோல நேற்றிரவு 7:20 மணிக்கு சென்னை செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் மானாமதுரை ரயில்வே ஸ்டேஷனிலேயே நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் பயணிகள் மிகுந்த அவதிக்குள்ளாயினர். மானாமதுரை ஊருக்குள் இருந்து மற்ற பகுதிகளுக்கு செல்லும் வாகன ஓட்டிகளும் ரயில்வே கேட் பழுதால் நீண்ட நேரம் காத்துக்கிடந்தனர். இரண்டு மணி நேரத்திற்கு பிறகு பழுது சரி செய்யப்பட்ட பிறகு விருதுநகர் ரயில் மானாமதுரை ஸ்டேஷனுக்கு சென்றது. அதன் பிறகு சென்னை ரயில் சென்றது.

# சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் கருணாநிதி பிறந்தநாள் விழா தெருமுனை கூட்டம்



பெருங்குடி, ஜூலை.13-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் 11.07.2025 நாளன்று வெள்ளிக்கிழமை மாலை 6:00 மணிக்கு பிள்ளையார் கோவில் தெரு, பெருங்குடி, முத்தமிழ் அறிஞர், டாக்டர் .கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் மற்றும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அறிந்த ரமேஷ் வழிகாட்டுதலின்படி, வழங்கும் விழா சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், பெருங்குடி, ம. ஸ்ரீகாந்த் தலைமையில் சிறப்பாக நடைபெற்ற விழாவில் 14 வது மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி செயலாளருமான, பெருங்குடி, எஸ். வி. ரவிச்சந்திரன் மற்றும் விருகம் பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான, ஏ .எம்.வி.பிரபாகர் ராஜா முன்னிலையில் நடை பெற்றது. வரவேற்புரையாக 184 வது வட்டச் செயலாளர்கள், எம். டேவிட் சௌந்தர்ராஜன்,ஆ. தேவராஜன், மாவட்டக் கழக பிரதிநிதி, இரா . இராஜேஷ்குமார் அனைவரையும் வரவேற்றனர். தலைமைக் கழக பேச்சாளர்கள் இந்திரகுமார் தேரடி, சந்தோஷ் ஜெய் திமுக நான்காண்டு சாதனையை விளக்கி கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை பற்றி கூறினார்கள்.

விழாவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை தமிழ்நாடு முழுவதும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்த திமுக அரசின் சாதனைகளைப் பற்றி சிறுவர்கள் முதல் பெரியவர் வரை பல திட்டங்களை கொண்டு வந்த நான்காண்டு சாதனைகள் பற்றியும் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்று திட்டங்களை கொண்டு வந்த டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்கள் என்றென்றும் திமுக அரசின் சாதனைகளைப் பற்றி விளக்கி தலைவர்கள் சிறப்புரையற்றினார்கள். விழாவில் மாவட்ட துணைச் செயலாளர், பாலவாக்கம், மு. மனோகரன், புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர், ஆ.அரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், ஜே, இ, பாண்டியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கா, வீ, தியாகராஜன் மற்றும் மடிப்பாக்கம் வட்ட கழகச் செயலாளர் சுரேஷ் , மாணவரணி அமைப்பாளர் ரமணன், பார்த்திபன், வளர்மதி, கண்ணன், கார்த்திக், பிரபு, நாகராஜ் நன்றி உரையாக 184 வது வட்ட துணைச் செயலாளர், தேவ. மாரியப்பன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர், டி .சதீஷ் (என்கிற )பொன்மனச் செல்வன், சோழிங்கநல்லூர் இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள், பி. ஜெயக்குமார் டீ. விமல்குமார், வி. மகேஸ்வரன் ,ஆர். செல்வகுமார், ஆர். அருணாச்சலம் உள்ளிட்ட திமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161